உ
கணபதி முருகா





தமிழீழ திருநாட்டின் யாழ்ப்பாண மாவட்ட

மூளாயம்பதி வாசகரும்

காலஞ்சென்ற

**ஸ்ரீமான் இராமசுவாமிப்பிள்ளை தம்பையா J. P.**

(இளைப்பாறிய தபாலதிபர்)

அவர்களின்

இலட்சிய இல்லத்தரசியும்

இருமரபும் துய்ய வன்னிய வேளாண் குலதிலகரும்

காலஞ்சென்ற

**திரு. க. பொன்னையா அவர்களின்**

அருந்தவ சிரேஷ்ட புதல்வியுமாகிய

## திருமதி
## சிவபாக்கியவள்ளிநாச்சன் தம்பையா

அவர்கள்

**சிவபதமடைந்தமை குறித்த**

# நினைவு மலர்

**15 - 10 - 1988**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின்

நினைவு மலரை

அவர்களின் பாதமலர்களில் பாசத்துடன்

சூட்டிச் சமர்ப்பிக்கின்றோம்

ஸ்ரீமான் இ. தம்பையா
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி

சிவபாக்கியவள்ளிநாச்சன் தம்பையா

தோற்றம் : 20·09·1916

மறைவு : 28 – 09 – 87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## தேவாரம் திருத்தாண்டகம்

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம்ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேராய்
கழுகுன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

காலஞ்சென்ற

## திருமதி சிவபாக்கியவள்ளி நாச்சான் அவர்களுக்கு நற்கதியருளுமாறு அன்னாரின் குடும்பத்தார் நவிண்டில் குலனை விநாயகரைப் பாடிப் பரவியது

நன்னீர் வளஞ்சால் நவிண்டிற் பதியினில் நாயகமாய்
தன்னே ரிலாத தனியாம் குலனையிற் தந்திமுகா!
விண்ணோர் குலவிட எம்மன்னை நின்னை விரைந்தடைந்தாள்
பொன்னார் திருவடி சேர்த்தின்பம் நல்கிப் புகலருளே.

ஆலும் அரசும் அயலே வயல்களு மாயடர்ந்து
ஞாலஞ் செழுத்திடச் சூழ்குல னைப்பதி நாயகமாய்
கோலம் மிளிர்ந்திட வீற்றிருந் தாண்டிடும் கொற்றவனே!
சிவமார் எம்மாமி முத்தியின் பம்பெறச் செய்தருளே.

தந்தையைச் சுற்றித் தனியொரு மாங்கனி பெற்றுலகம்
தந்தைக் கிணையெனக் காட்டிய ஐங்கா! தீவினையால்
நொந்தின் கழிவிடத் தோடிவந் தாளெம தன்னையவள்
உந்தன் பதமளித் தெங்களை யாண்டருள் உத்தமனே.

## பொலிகண்டிக் கந்தசுவாமியைப் பாடிப் பரவியது

கத்துங் கடலலை வாரி! யிறைக்குங் கனகமணி
முத்தும் பவளமுஞ் சேர்ந்து குவியும் முதுநகரிற்
சித்தந் தெளியத் திருவாலயங் கொண்ட சீர்முருகா!
நித்தந் தொழுதவெம் மன்னைக்கு நற்கதி நீயருளே.

அடிநாடி யோடி வருமடி யார்கட் கருள்சுரக்கும்
வடிவே லவாகுற வள்ளியங் காமயில் வாகனனே!
படிமேலெம் மன்னை யறியாமற் செய்த பழவினைகள்
குடிபோக நீக்கி யருள்வாய் சாலோகக் குடியிருப்பே.

வளமோங்கு கந்த வனப்பதி நாடிநன் வன்னிமர
நிழல்வீற் றிருந்த முருகா குகாவுனை நித்தநித்தம்
உளமோங்கு வந்தித்த வன்னையுன் தூய வுயர்கமல
கழல்நாடி வந்தாள் கடைக்கணித் தாண்டெமைக் காத்தருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய்ப் பதியில் வீற்றிருந்தருளும் சித்திவிநாயகரைப் பாடிப் பராவியது

தெங்கும் பனையும் திகழ்வயல் யாவும் திரண்டொருங்கே
தங்கும் இடமாம் மூளாய்ப்பதி மேவித் தடங்கருணை
எங்கும் பொழிய எமைக்காக்கும் சித்திவிநாயகரே!
துங்க முறும்முத்தி எம்மன்னைக் கீந்து துயர்களையே.

கானக் குறத்தி தனையுன்றன் தம்பி அடையவெண்ணி
மானைத் துரத்தி யிடர்ப்பட ஓடி உதவிநின்றாய்
ஈனப் புலையுடல் நீக்கியெம் மன்னை யுனையடைந்தாள்
ஞானக் கொழுந்துநீ ஏற்றடி சேர்த்தருள் ஏத்தினமே.

ஒருகோ டிருசெவி மூன்றுகண் ணால்வாய் கரமைந்துடைத்
திருவா குருவின் இறையே யுனையே பணியுமன்னை
அருகே யழைத்துன் னடியே பொருந்த அருளுதியெம்
மருளே யகற்றும் மழகளி றேயடி போற்றினமே.

## மூளாய் வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசுவாமி கோயிலில் வீற்றிருந்தருளும் முருகப்பெருமானைப் பாடிப் பராவியது

நீல மயிலுடன் சேவலு மார்ப்ப நெடியதங்க
வேலும் விளங்கக் குறவள்ளி குஞ்சரி வீற்றிருக்கத்
தாலம் சிறக்க மூளாய்ப் பதியினில் தங்கியவுன்
கோலங் கனிக்கவந் தாளன்னை வாவென்று கூட்டுவையே.

சூரைத் தடிந்து கிரவுஞ்ச வெற்பைத் துளைத்தசுரர்
வேரைக் களைந்து மூளாய்ப் பதியினில் வீற்றிருக்கும்
சீரைப் புனைந்த முருகா வுனைத்தினம் சேவித்ததா
யாரைப் பதாம்புயப் பேறீந்தன் போடினி தாளுவையே.

தேவாதி தேவர் சிறைமீட்ட வாதிருச் செந்தில்வதி
தேவா பழனிப் பதியுறை யாண்டித் திருமகனே!
நாவா லருண கிரிதந்த பாவுறை நாயகனே
காவாயெம் தாயையும் நின்னு ரருளையும் காண்பதற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றுந் துறந்த பட்டினத்தடிகள்
### தமது அருமைத் தாயார் இறந்தபோது
### பாடிய பாடல்கள்

### வெண்பா

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியபூ
மானே யெனவழைத்த வாய்க்கு.

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி யெந்தன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

வீற்றிருந்தாள் அன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறுனாள் - பால்தெளிந்த
எல்லாரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதி நிர்ணய வெண்பா

சீரார் சிவபாக் கியவள்ளி நாச்சனுமே
ஏரார் சிவபதத்தில் எய்தியநாள் — பேராரும்
ஆண்டு பிரபவ ஆயபுரட் டாதிபூர்வம்
பூண்டதிதி பஞ்சமியே போற்று.

### நேரிசையாசிரியப்பா

இந்துமா கடலின் முத்தெனை இலங்கும்
செந்தமிழ் ஈழ அன்னையின் சிரசெனை
மிளிரும்யாழ்ப் பாண மேதகு நாட்டின்
ஒளிர்முக மாயுயர் வலிகாமம் வடக்கில்
திகலமாய்த் திகழ்ந்து நீர்தமிழ் கொழுத்து
விளங்கிடு மூளாயாம் விழுமிய ஊரில்
மாபலா வாழை மாண்புடன் மலிந்து
முக்கனி சிந்தி மொய்வாம் ததும்பும்
வித்தகர் போற்றும் வியத்தகு நிலங்களும்
தண்ணாறும் பசுமைகூர் தனைசால் வயல்களும்
எண்ணிலை மலிந்து எங்கணும் திகழும்
மன்னிய வளஞ்சால் மாபெரும் சூழலில்
பொன்னையா வெனும் புகழ்சால் புண்ணியன்
பண்ணிய அருந்தவம் உருவெடுத் தென்ன
சிவபாக்கியம் வள்ளி நாச்சான் என்னும்
சீர்மிகு செல்வி சிறந்தநன் னுளில்
அவதரித் தாங்கண் அழகொடு வளர்ந்து
அரும்பெறற் கல்வி விரும்பியே கற்று
வளர்மதி யென்ன வயங்கின ளன்றே
எல்லை காவே நல்ல நாச்சன்
என்னுநல் நங்கை ஏந்திழை தானும்
பன்னு சோதரியாய்ப் பண்பொடும் தோன்றி
இந்நிலம் போற்ற ஈண்டு வாழ்வரே
செந்திரு வனைய சிவபாக்கியம் வள்ளிநாச்சன்
தண்ணளி சான்ற தம்பையா வெனும்
கன்னனேர் கொடைமிகுங் கனவானை தன்னை
அந்தணர் போற்ற அங்கியின் முன்னர்
அந்தமி லன்புடன் அருமணம் புரிந்து
இல்லற மேமிக நல்லற மென்று
இந்திர இன்பம் எய்திடு நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மக ளெனவொளிர் பொன்மலர் மற்றும்
இராமனேர் எழில்சால் ராமச்சந்திரனும்
விழுமிய குணத்தான் விக்கின ராசா
விமலை யெனத்தகு விக்கின ராணி
மதியென மிளிர்மகா ராணி தன்னொடும்
அறம்பல புரிந்திடும் அழக ராசா
பாவைபோ லெழில்மிகு பவள மலரும்
அரும்பெறல் மக்களாய் அவனியில் தோன்றி
இருப்புக ழோடும் இந்நிலம் போற்றப்
பண்பொடும் வாழும் அன்புடை யோரே
ஆலயப் பணிகள் அயராது புரியும்
சீலமார் செல்வன் இராசேஸ் வரனும்
கலைபல போற்றும் கனகரா யன்னொடும்
யூகமார் செல்வன் யோகலிங்கமும்
மருமக்க ளாக மாநிலம் வியக்கத்
தருமநெறி பேணும் தகவுடையோரே
கமலத் திருதிகர் கமலாம்பிகையும்
சாந்தமும் தயையும் ஏந்திய நல்லாள்
சாந்த குமாரியாம் சற்குணவதியும்
கலைமிகு செல்வி கருணேஸ் வரியும்
மருகிமா ராக மகிழ்ச்சி மீக் கூர
இருநிலந் தன்னில் இன்பொடு வாழ்வரே
"நிலவென மிளிரும் நிலாணியும் மற்றும்
கலைமிகப் பயிலும் கலாணி தன்னொடும்
சற்குணம் சான்ற சங்கீதாவும் சாந்தமே
உருவென கண்ணின் மணியாம் சவீந்திராவும்
கற்கண் டெனக்கதை கவினுறச் சொல்லும்
சஞ்சேந்திராவும் முத்தென முதற்றோன்றிய
அனுஷாவோடு சாற்றுரும் எழில்சார்
கவிதாவும் கண்ணன் வடிவென
கிருஷ்ணவோடு அன்புசால்
அர்ச்சனா ஆகிய சிறுர்கள்"
ஆரா அன்புடன் அகலா தென்றும்
பேரப் பிள்ளைகளாய்ப் பெரிதுவந் தனரே
சிவயாக் கியவள்ளி நாச்சனும் செல்வி
சிவபத்தி மிக்க சீரிய குணத்தான்
காலையும் மாலையும் கயமுகக் கடவுளைச்
சாலவும் போற்றும் சால்பின ளன்றோ
புள்ளிமயி லேறும் வள்ளி கேள்வனும்
ஒள்ளிய வேலோளிர் உயர்தனி முருகனை
வெள்ளி தோறும் விரதமாய் வணங்குவாள்
தெள்ளிய நவராத்திரி விரதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுவந் தனுட்டித் தோங்கு மொன்கொடி
சுற்றம் படைத்த நற்றவ முடையாள்
கற்றவர் போற்றும் கண்ணியம் மிக்காள்
மக்கள்பால் வார்த்து மருகிப் புலம்ப
மருமக்கள் யாவரும் மருவியே மயங்க
உற்றார் உறவினர் உருகித் துடிக்க
கற்றோர் மற்றோர் கண்மழை பொழிய
பிரபவ ஆண்டு பிறங்கு புரட்டாதி
பூர்வ பக்கப் பஞ்சமி தன்னில்
பொன்னே ருடலம் பொங்கெரி யுண்ண
மின்னார் சடைமுடி யண்ணல்
பொன்னார் கயிலை புக்கன ளன்றே.

❋

## கலித்துறை

வருவோர்க் கறுசுவை யன்னமும் பானமும் வன்கலைசேர்
திருவோர்க் கரிய திரவியமீந்து உறவுகொண்டு
வருவோர்க் கினிய வணக்கமு மீயும் வரகுணஞ்சேர்
தருவே யெனநிகர் வள்ளிநாச்சன் வானுல கெய்தினளே.

காவென்ன ஏழைகள் கார்மேக மென்னக் கவிஞர்களம்
மாவென்ன மக்களிம் மண்டல மேவிடு மங்கையர்தந்
தேவென்ன வாழ்ந்தபொன் னும்வள்ளி நாச்சனைத் தேவர்கணம்
வாவென்னச் சென்றனள் சாலோக வீட்டினில் வாழ்வதற்கே.

பாட்டிற் கிசைந்தநற் பண்குன்றி மாய்ந்தது பாக்கியஞ்சேர்
வீட்டிற்கு வைத்த விளக்குத் தணிந்தது வீரமணி
நாட்டிற் கனிதரு கற்பகம் பட்டது நற்புலவர்
ஏட்டிற் குறுவள்ளி நாச்சான் மறைந்துவிண் ணெய்திடவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்மக்கள் பிரலாபம்

### விருத்தம்

தெள்ளுதவத் தாவெம்மைப் புவியிற் பெற்றே
 தேனமுத மூட்டியிரு கரத்தா லேந்தி
விள்ளுகலை யூட்டி மதியூட்டி மேலாய்
 விளங்குமுயர் செல்வமெலாம் விளங்க நாட்டி
கொள்ளுபுகழ் ஈட்டிவைத்த அன்னைக் கோநாம்
 குடமுடைத்துக் கொள்ளிசிர மேலேற்றி
அள்ளியிட்டோம் வாய்க்கரிசி ஐயோ அம்மா!
 ஆகொடியோம் என்செய்தோம் அவனிமேலே.

## பெண்மக்கள் புலம்பல்

(வேறு)

மாதவத்தா லெம்மை யிந்த மண்மீதி லின்றெடுத்துக்
காத லுடன்வளர்த்த கற்பகமே! பொற்பூவே!
ஏதமிலாத் தேனே எமைக்கலங்க விட்டதென்னே
நாத மணித்தேரே நடந்துவந்து கூறுயோ.

கண்ணிறைந்த காதலரைக் காசினியில் தேர்ந்தெடுத்து
மண்ணுலகம் போற்ற மணம்முடித்துச் சீராட்டி
எண்ணரிய சீதனங்கள் ஈந்தெமையே வாழவைத்த
புண்ணியஞ்சேர் மாதாவும் போனவழி காணேமே.

## மருமக்கள் பிரலாபம்

(வேறு)

குலம் விளங்கக் குடிவிளங்கக் கொற்ற மோங்கக்
 கொடுத்துவைத்த பாக்கியத்தின் வேறுதேங்க
நலம் விளங்க நடுவிளங்க நவிலுங் கீர்த்தி
 நாற்றிசையும் போய்விளங்க நம்மூளாய்த்
தலம் விளங்கத் திருமகள்போன் றவதரித்த
 தங்கமே! யெம்மாமி! தேவதேவன்
புலம்விளங்க நாம்கலங்கப் பூமிவாடப்
 போயினையே நீதியிதோ ஐயோவையோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

ஆடை யணிபுனைந்து அலங்கரித்துச் சிராட்டி
கோடை வெயில்மழையில் கொடும்பனியில் வாடாமல்
வாடைகண்ட நெற்பயிர்போல் வளர்த்தெடுத்த பேர்த்திதனைப்
பாடையிலே போகவிட்ட பாவிகளாய்ப் போனோமே.

## உற்றார் உறவினர் அயலவர் பிரலாபம்

(வேறு)

மாதாவின் முகங்காணா மதலையானோம்
மழைநெடுநா ளில்லாத பயிரதானோம்
சூதாடி யரசிழந்த வேந்த னானோம்
சூறைதனி லகப்பட்ட சஞ்சதானோம்
ஆதார மில்லாப்பூங் கொடியதானோம்
அலைகடலிற் காற்றடிக்கும் கப்பலானோம்
பாதார விந்தமினிக் காண்ப தென்றோ
பதைத்துவிட்டோம் ஐயையோ பகருவாயே.

## தேற்றம்

அலைகடல்சூழ் புவனமெலாம் போற்றுங்காந்தி
அடிமருவு கஸ்தூரி யம்மை யெங்கே
கலையமுதக் கடலுண்ட ஔவை எங்கே
கற்புடைய கண்ணகிப்பெண் கடவுளெங்கே
விலைமதியாப் பாரதத்தா யீன்றெடுத்த
வீரமணித் தாய்மார்கள் எங்கேயெங்கே
தலைசிறந்த வள்ளிநாச்சன் தணந்துபோகத்
தயங்குவதேன் துயரமினித் தணிகுவீரே.

ஆக்கம் : பண்டிதர் R K முருகேசனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org